Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.135/2023

**P.W**.3 (LW8)

| | |
|---|---|
| Name | : **திரு.உசேனுதீன்** |
| Father/Husband Name | : திரு, |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.07.2026

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் கல்பாக்கம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது மாமல்லபுரத்தில் வசித்து வருகிறேன்.**

2. கடந்த 26.01.2023ம் தேதி மதியம் 2.30 மணியளவில் கல்பாக்கம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது பாலசந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.10/2023இ.த.ச.பிரிவுகள் 294(பி), 324, 506(2) கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(புகார் மனு அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் கார்த்திக், தம்பிதுரை ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். ( **பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது.) (மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்பு சாட்சிகள் பாலசந்திரன், சுப்பிரமணி, சசிக்குமார், மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான கார்த்திக், தங்கதுரை ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. இவ்வழக்கின் எதிரியான அப்துல்மாலிக் என்பவரை 27.02.2023ம் தேதி பகல் 11.00 மணியளவில் புதுப்பட்டினம் இ சி ஆர் சாலை அடுப்பாங்கரை ஓட்டல் அருகே கைது செய்து நீதிமன்றக் காவலுக்குட்படுத்தினேன். இந்த வழக்கில் ஆஜர் எதிரி பயன்படுத்திய 32 அடி நீளமுள்ள வேலிக்காத்தான் கட்டை ஒன்றை மகஜரில் கைப்பற்றி படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினேன். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது) (32 அடி நீளமுள்ள வேலிக்காத்தான் கட்டை ஒன்று அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இவ்வழக்கில் காயம்பட்ட சுப்பிரமணி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் வரலட்சுமி மற்றும் சரண் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து அவர்களிடமிருந்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றை பெற்றேன். **(விபத்து பதிவேடு அ.சா.ஆ.8 ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று மருத்துவர் சான்றளித்துள்ளார்.

**5.** இத்துடன் விசாரணையைமுடித்து எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 294(பி), 324, 506(2)ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வழக்கு சம்பவம் குறித்து வாக்குமூலம் அளித்துள்ளார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

சொன்ன தேதி, நேரத்தில் அ.சா.1றிடம் புகார் வாக்குமூலம் எதுவும்

நான் பெறவில்லை என்றாலும், நான் சரிவர சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்களை அனைத்தும் நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏதுவாக தயார் செய்யப்பட்டது என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.